DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 133/2024 |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| Name | : | **தமிழன்** |
| Father's Name | : | வீரபத்திரன் |
| Village | : | மீனாட்சி புரம் |
| Taluk | : | காரைக்குடி |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 66/2025 |

**(வழக்கின் எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 26.03.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது கல்லலில் வசித்து வருகிறேன், நான் விவசாய வேலை செய்து வருகிறேன். வழக்கில்காயம் பட்ட கிருஸ்ணவர்மன் என்ற கிட்டுவை எனக்கு தெரியாது. எதிரிகளை எனக்கு தெரியும் . எனது ஊர்காரர்கள். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் வழக்கு சம்ப காலத்தில் மினாட்சி புரத்தில் உள்ள எனது வீட்டில் நான் இல்லை. சாட்சி கிருஸ்ணவர்மன் என்ற கிட்டு எவ்வாறு காயம் பட்டார் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

போலிசார் என்னை விசாரித்தார்கள்என்றும் இவ்வழக்கின்

சாட்சியான கிருஷ்ணவர்மன் என்ற கிட்டு வழக்கின் எதிரியான லெட்சப்பாண்டிக்கு ரூ. 25000/- கடனாக கொடுத்திருந்தார் என்றும் அதை திருப்பி கேட்டபோது அவருக்கு இடையில் முன்விரோதம் ஏற்பட்டது என்றும் 08.06.2023 ம் தேதி இரவு 09.30 மணியளவில் நானும் காந்தி மற்றும் லெட்சுமணன் ஆகியோர் வீட்டிற்கு வெளியே பேசிக்கொண்டிருந்த போது சாட்சி கிருஷ்ணவர்மன் என்ற கிட்டுவை அசிங்கமாக வார்த்தைகளால் திட்டி எதிரி மணிகண்டன் அருவாள் மனையால் அவரது தலையில்வெட்டி காயப்படுததினார் என்றும் மீண்டும் இடது கை பெருவிரலில் வெட்டி காயப்படுத்தினார் என்றும் பின் எதிரி லெட்சப்பாண்டி கட்டையால் சாட்சி கிருஷ்ணவர்மன் என்ற கிட்டு வை இடது முன்பக்க தலையில் வெட்டி காயப்படுத்தினார் என்றும் பின்பு நானும் மற்றவர்களும் காயம் பட்ட கிருஷ்ணவர்மன் என்ற கிட்டு 108 ஆம்புலன் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் எதிராளி முன்பாக சாட்சியம் சொல்லப்பட்டு என் கண்காணிப்பின் கீழ், அவைகளை அப்படியே தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சரியாக இருப்பதாக சாட்சியால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

A PASUMPON SHANMUGAIAH
Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.03.24 21:56:12 +0000

தலைமைக் குற்றவியல் நடுவர்,

சிவகங்கை.